கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 28.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் யாழ் ஜீனோமிக்ஸ் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழி வகுக்கிறது. பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிரி தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்தல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது.

இதன் தொடக்கமாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் சார்பாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர்.ந.செந்தில் அவர்கள் மற்றும் கோயம்புத்தூர் யாழ் ஜீனோமிக்ஸ் நிறுவனம் சார்பாக திரு.ரா.முருகேசன் ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளர் முனைவர்.இரா.தமிழ்வேந்தன் அவர்கள் முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்று (28.07.2025) கையெழுத்திட்டனர்.

யாழ் ஜீனோமிக்ஸ் 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கோயம்புத்தூரில் தலைமையிடமாகக் கொண்ட முன்னணி உயிர் தொழில்நுட்ப நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் Illumina, Oxford Nanopore மற்றும் Ion Torrent போன்ற உலகத் தரத்திலான நவீன தளங்களை பயன்படுத்தி உயர் துல்லிய டிஎன்ஏ தரவியல்

மற்றும் உயர் திறன் (high-throughput bioinformatics) பகுப்பாய்வுகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகிறது. 100–க்கும் மேற்பட்ட உயர்மட்ட பன்னாட்டு அறிவியல் இதழ்களில் வெளியான ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்கியுள்ளதோடு, RT-PCR கிட்கள் மற்றும் நவீன உயிரியல் ஆய்வுக்கிட்களையும் தயாரித்து, ஆராய்ச்சியாளர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் உயிரி தொழில்நுட்ப மாணவர்களுக்கு தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் திறன்கள் பகிர்ந்து வருகிறது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***